# தமிழர் மீதான கொலை, பாலியல் வன்முறைகள் அதிகரிப்பு

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 05 இதழ் 131
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21 - 7 - 1995

## மன்னிப்புச்சபைகுற்றச்சாட்டு

(கொழும்பு)
இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசை கேட்டுள்ளது என 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதால் இலங்கை அரசு முன்னெடுத்துள்ள இராணுவ நடவடிக்கையால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசைக்

(7-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்ட பாடசாலைகள் திங்கள் முதல் இயங்கும்

(குருநகர்)
அண்மைய இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்காமலுள்ள யாழ்- நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகள் சகலதும் வருகிற திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் தவணை நடாத்தப்படவேண்டிய தவணைப் பரீட்சையை மூன்றும் தவணை நடாத்துவதெனவும் பாடசாலைகளில் பதுங்கு குழிகள் அமைக்க நடவடிக்கை எடுப்பதெனவும் யாழ் - நல்லூர்

(6-ம் பக்கம் பார்க்க

# இராணுவ படையெடுப்பை குடாநாடு எதிர்கொள்வதால்

# போராட முன்வருமாறு இளைஞர் யுவதிகளுக்கு புலிகள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)
அடுத்த ஒரு இராணுவப் படையெடுப்பை குடாநாடு எதிர்கொண்டபடியே உள்ளதால் மண்ணையும், மக்களையும் பாதுகாக்க விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராட முன்வருமாறு தமிழீழ விடுதலைப்புலிகள், இளைஞர் யுவதிகளுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையொன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

பேரழிவுகளை எமது மக்களுக்கு உண்டு பண்ணிய 'முன்னேக்கி பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்கு பதிலடியாக, தலைவர் பிரபாகரன் அவர்

(2-ம் பக்கம் பார்க்க)

## தீர்வு கிட்டும் வரை ராணுவ நடவடிக்கை தொடருமாம்

(கொழும்பு)
இனப்பூசலுக்கு சரியான தீர்வு காணப்படும்வரை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும்.

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அண்மையில் மேற்கொள்

(5ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. உயர்தர பரீட்சை வடக்கில் ஒத்திவைப்பு

(கொழும்பு)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லாத பகுதிகளில் இம்முறை நடாத்தப்படமாட்டாது என கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரன நேற்று நாடாளுமன்றில் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை பின்னர் பிறிதொரு தினத்தில் இப்பகுதிகளில் நடாத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்

(5ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)
யாழ். மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நேற்று மாலை ஆறு மணியிலிருந்து நீக்கப்பட்டிருப்பதாக 'ரூபவாஹினி' நேற்றிரவு தெரிவித்தது.

கடந்த ஒன்பதாம் திகதி காலை அரசு அறிவித்த இந்த ஊரடங்கு உத்தரவு இதன்படி 275 மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் தொடர்ச்சியாக அமுல் செய்யப்பட்டுள்ளது.

கி

## வடமராட்சிக் கடலில் மீனவர் மீது கடற்படை தாக்குதல்

(நெல்லியடி)
பருத்தித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற மீனவரைநோக்கிரோந்து வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயங்களுக்கு இலக்கானார்: இன்னுமொருவர் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் கடலில் நிகழ்ந்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் தங்கள் பகுதிகளில் தொடர்ந்தும் இருக்கலாம்

(யாழ்ப்பாணம்)
அளவெட்டி தவிர்ந்தஏனைய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள், எவ்வித பயமுமின்றி தங்கள் தங்கள் பகுதிகளில் தொடர்ந்திருக்கலாம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: மக்கள் வீண் வதந்திகளை நம்பி இடம்பெயர்ந்துவருகின்றார்கள். எந்தவிதமான வதந்திகளையும் நம்பாது தங்கள் பிரதேசத்தில் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இந்த வதந்திகளை பரப்புவ

(2ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் புலிகளின் தாக்குதலில் ஒன்பது படையினர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)
கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இரு வெவ்வேறான தாக்குதல் சம்பவங்களில் மொத்தம் ஒன்பதுபடையினர் கொல்லப்பட்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

முதலாவது சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள திக்கோடை என்னுமிடத்தில் நேற்று முன்தினமிரவு 11-30 மணியளவில் இடம்பெற்றது.

திக்கோடை விசேட அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத் தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றையவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

சுமார் 200 விடுதலைப் புலிப் போராளிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும் கிழக்கில் விசேட அதிரடிப்படையினருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தாக்குதல் இதுவென்றும் பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கிழக்கில் இராணுவத்தின

(5ம் பக்கம் பார்க்க)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ் கல்வி வலயம்-1 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்குமான விசேடகூட்டம் முன்னரே தீர்மானிக்கப்பட்டபடி 22-ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10 மணிக்கு கல்வி வலயம்-1 இன் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயங்களின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொம்மனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு இருக்கிறது: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ராஜன்ஸ் 69, 4-ம் குறுக்குத் தெரு, சின்னக்கடை, குருநகர். (சி-1559)

### தேவை

வெற்றுஜாம் (JAM) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது: ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். [ஏ-5115]

### காணவில்லை

எம்மால் அன்பாக வளர்க்கப்பட்ட அல்சேஷன் (கறுப்பு ஊதா கலப்பு) நாய் காணமல் போய்விட்டது. அதனைக் கண்டவர்கள் தகவல் தரவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும். S அருள்நங்கை, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை (சி-5124)

### கண்டெடுக்கப்பட்டது

முத்தையா சீவரத்தினம், வைரவர் கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்பவரது அடையாள அட்டையும், சீ.ஞானேஸ்வரி 121/14சோலைபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம் என்பவரது. கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட படமும் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒடபடைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ளலாம்:

### கூட்டம் ஒத்திவைப்பு

(நெல்லியடி)

பருஹாட்லிக் கல்லூரிபழைய மாணவர்மன்றத்தின்வருடாந்தப்பொதுக் கூட்டம் முன்னரி அறிவித்தது போல் எதிர்வரும் 23ம்திகதி நடைபெறமாட்டாதெனவும்பிறிதோர் தினத்தில் புதிய அறிவித்தலுடன் முன்னைய நிகழ்ச்சிநிரலுடன் நடைபெறும் எனவும் மேற்படி மன்ற இணைச்செயலாளர் அறிவித்துள்ளார். 160-கி

# பல்கலை. அனுமதி கிடைக்காதோரும் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றும் அனுமதி கிடைக்காத மாணவர்களின் நன்மைகருதி அவர்களையும் பல்கலைக்கழகத்தில் சேர்க்கும் திட்டமொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான சுற்றுநிருபமும் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிமுறையில் பின்பற்றப்படும் நடைமுறை காரணமாக ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லமுடியாதுள்ளது. சில பல்கலைக்கழகங்களில இடமிருந்தும் அனுமதி வழங்கமுடியாத நிலை காணப்படுகிறது.

ஆகக்குறைந்தது 180 புள்ளிகளைப்பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதியைப் பெற்ற மாணவர்கள் 2ம் ஆண்டு மாணவர்களாக பல்கலைக்கழகங்களில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

ஆனல் இவர்கள் 2-ம் ஆண்டு வெளிவாரி மாணவர்களாகப் பயிலவேண்டும் அதற்கு தபால்மூல விரிவுரைமட்டுமே நடைபெறும். அல்லது பிற கல்வி நிறுவனங்களிலோ அல்லது பிற பல்கலைக்கழகங்களிலோ 1ம் ஆண்டு பயின்று அதற்கான சான்றிதழைச் சமர்ப்பித்தால் 2-ம் ஆண்டு மாணவர்களாக பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் ரசி

## இராசி பலன்

21-07-1995

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு ஆடி- 5]

நவமி மு. ப. 10 53 வரை. பரணி முன்னிரவு 8-06 வரை. சித்தயோகம், ராகு காலம் காலை 10 31. முதல் 12-01 வரை. சுபவேளை காலை 6-01 முதல் 7-31 வரை.

மேடம்: தொழில் கௌரவம், சிறுபயணம், காரிய சித்தி.

இடபம்: மனதில் சலனம், குடும்ப வேற்றுமை, அலைச்சல்

மிதுனம்: புதிய சூழ்நிலை, பொருள்வரவு, நண்பர் ஆதரவு.

கடகம்: தாய்வழி உறவு, தெய்வீகப் பணி, மனமகிழ்ச்சி.

சிங்கம்: கருத்துவேறுபாடு, உறவின் கவலை, உடற்சோர்வு.

கன்னி: குடும்பவேதனை, எதிர்பாராத துன்பம், அவப்பெயர்.

துலாம்: வெற்றிவாய்ப்பு, தொழில் லாபம், கலகலப்பு;

விருச்சிகம்: ஆத்மபலம், நல்லோர் நட்பு, வேலைப்பழு.

தனுசு: மனச்சஞ்சலம், சிறுபூசல், அனுவசிய செலவு.

மகரம்: தவறிழைத்தல், கோப வார்த்தை, கடும்போக்கு.

கும்பம்; எதிரிகளை வெல்லுதல், சுபகாரியம், பெண்உதவி.

மீனம்: பணியாளர் கவலை, குழப்பமடைதல், மனவிரக்தி.

— ஜோஸ்யர்

## இராணுவ படையெடுப்பை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களால் திட்டமிட்டு-நெறிப்படுத்தப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கை குடாநாடு மீதான படையெடுப்பு முயற்சிக்கு பலத்த பின்னடைவை கொடுத்துள்ளது.

தமது இராணுவ பலத்தில் வைத்திருந்த அதீத நம்பிக்கை காரணமாக 'முன்னேக்கி பாய்தல்' என்று பெயரிட்டு சிங்கள படைத் துறைத் தலைமை நடாத்திய இராணுவ நடவடிக்கைக்கு இராணுவ ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தகுந்த பதிலடி கொடுக்கும் நோக்குடன் 'புலிப்பாய்ச்சல்' என்றுபெயர் சூட்டிய தலைவர் அவர்கள், அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியதன் மூலம் குடாநாட்டு மக்களை பேராபத்து ஒன்றிலிருந்து பாதுகாத்த அதேவேளை சிங்கள பேரினவாதத்தின் இராணுவத் திமிருக்கும் சாட்டை அடி கொடுத்துள்ளார். அதே வேளை குறித்த இந்த பதில் இராணுவ நடவடிக்கையை நடாத்த முன்னரே 'புலிப்பாய்ச்சல்' என்று பெயர் சூட்டிய விதம் அந்த இராணுவ நடவடிக்கையின் வெற்றியில்- அது ஆரம்பிக்கப்பட முன்னரே தலைவருக்கு இருந்த முழு நம்பிக்கையையும் கோடிகாட்டுகிறது.

தரை, கடல், ஆகாயம் என மூன்று அரங்குகளிலும் சிங்கள படைகளை குறிவைத்து நிகழ்ந்த 'புலிப்பாய்ச்சல்' புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்றையும் சக்தி வாய்ந்த கட்டளைக் கப்பல் ஒன்றையும், நூற்றுக்கும் மேற்பட்ட படையினரையும் அழித்துவிட்டது. இதன் விளைவுகள் கொடுத்த நெருக்கடிகளால் புதிதாக ஆக்கிரமித்த பகுதிகளை விட்டு சிங்கள படைகள் பின்வாங்கிச் சென்றுவிட்டன,

குடாநாட்டு மக்கள் அனைவரையும பீதிக்குள்ளாக்கிய சிங்களபடைகளின் இராணுவ நடவடிக்கை ஒன்று புலி வீரர்களால் சிதறடிக்கப்பட்டாலும் கூட குடா நாடு மீதான படையெடுப்பு அபாயம் இன்னமும் நீங்கிவிடவில்லை. எப்படிப்பட்டாவது யாழ் குடாநாட்டை முழுமையாக கைப்பற்றுவது என்பதே சந்திரிகா-ரத்வத்த தலைமையின் போர்த் திட்டமாகும். குடா நாட்டின் பல்வேறு படை முகாம்களிலிருந்தும் பல முனைகளுடாக கட்டங் கட்டமாக படைகளை நகர்த்தி குடாநாட்டை விழுங்கும் நாசகாரத் திட்டம் ஒன்றைச் சிங்களப் படைத்தலைமை தன்வசம் வைத்திருக்கின்றது. இதன் பொருட்டே கிழக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஆயிரக்கணக்கான படையினரை எடுத்து வட பகுதிக்கு அரசு அனுப்பி வைத்துள்ளது: அத்துடன் மேலும் மேலும் பலநூறு கோடி ரூபாய் செலவழித்து நவீன போர்விமானங்களையும் மற்றும் போராயுதங்களையும் அரசு வாங்கி குவித்து வருகின்றது.

'யாழ்ப்பாணத்தின் மையத்தைக் கைப்பற்றுவதே தங்களுடைய பிரதான இராணுவ இலக்கு' என சிறிலங்கா பாதுகாப்பு பிரதி அமைச்சர் திரு ரத்வத்த கூறியுள்ளார். இதன் அர்த்தம் யாழ், நகரத்தையும் அதன் கட்டடங்களையும் கைப்பற்ற சிங்களப் படைகள் விரும்புகின்றன என்பது மட்டுமல்ல. மாறாக யாழ் குடாநாட்டை மையமாகக்கொண்டு மிடுக்குடன் செயற்படும் தமிழரின் ஆட்சி அமைப்பைக் கைப்பற்றுவது என்பதே அதன் உண்மையான அர்த்தமாகும்,

இதேவேளை 'முன்னேக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை படுதோல்வியடைந்து வாரம் ஒன்று கழிந்த பின்பும் கூட, அந்தச் செய்தியைச் சிங்கள மக்களுக்குத் தெரிவிக்காது அரசு மறைக்க முயல்கின்றது. முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று மூன்று லட்சம் தமிழர்களை இடம்பெயர வைத்த அந்த இராணுவ நடவடிக்கையின்போது சிங்களப் படைகள் கைப்பற்றி- பின்னர்- நிலைகொள்ள முடியாது பின்வாங்கிச் சென்ற பகுதிகளின் மக்கள் மீண்டும் சென்று குடியேறிவிட்டனர். உண்மைநிலை இவ்வாறிருக்க தான் கைப்பற்றிய பகுதிகளிலேயே இராணுவம் இப்போதும் நிலைகொண்டிருப்பதாக சந்திரிகா அரசு விடாப் பிடியாகப் பொய்கூறி வருகின்றது:

தனது சொந்த மக்களிடமே உண்மை கூறாது தொடர்ந்து பொய்கூறி சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்ற முயலும் சந்திரிகா அரசை தமிழ் மக்கள் எவ்வாறு நம்ப முடியும்? அரசு-புலிகள் பேச்சுவார்த்தை காலகட்டத்தின்போதும் இவ்வாறுதான், புலிகளுக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியும் - பொறுப்புணர்ச்சி அற்ற விதத்தில்- தேவையற்ற அறிக்கைகளை விடுத்தும் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் சந்திரிகா அரசு நடந்துகொண்டது.

இது ஒரு புறமிருக்க, விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழ் மக்கள் வழங்கும் ஆதரவைச் சிதைக்கவும், போருக்கு முகங்கொடுத்து வாழ்ந்து வரும் எமது மக்களின் ஆன்ம உறுதியை உடைக்கவும் அரசு விரும்புகின்றது இந்த நோக்கத்துடன் தமிழ் மக்கள் மீது கண்மூடித்தனமான வகையில் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தி- சோகமும் துயரமும் மிகுந்த ஒரு அவல வாழ்வை அவர்கள் அனுபவிக்கும்படி செய்து தமிழ் மக்களைப் பழிவாங்கவும் சந்திரிகா அரசு விரும்புகின்றது. முன்னேக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது நிலங்களைக் கைப்பற்றுவதில் சிங்களப் படைகள் காட்டிய அக்கறையைவிட மக்களைக் கொல்வதிலும்- அவர்கள் இடம்பெயரச் செய்வதிலும் காட்டிய அக்கறை அதிகமாக இருந்தது.

தமிழ்மக்களுக்குப் பேரழிவுகளை உண்டுபண்ணி அதே வேளை புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்திவிட்டு ஈழத் தமிழினத்தை அடிமை கொள்வதையே சந்திரிகா-ரத்வத்த அரசு தனது கொள்கையாக வரிந்துள்ளது: இந்தக் கொள்கையைத்தான் முன்னைய அரசும் நடைமுறைப்படுத்தியது: சிங்களப் பேரினவாதத்தின் இனவெறிக் கொள்கையும் இதுதான்.

எது எவ்வாறு இருந்தாலும்

(6ம் பக்கம் பார்க்க)

### மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் திருடர்களும் காரணமாக இருக்கிறார்கள்.

'ஷெல்' வீச்சுக்களிலிருந்து பாதுகாப்பதற்கு பதுங்கு குழிகளை அமைத்து சொந்தப்பிரதேசங்களில் இருப்பதோடு எதிரியைத் தோற்கடிப்பதற்கு புலிகளுடன் மக்களை இணையுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார். வி-ம-தீ-கி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி - 1994|95

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும் ஆண்டு 9 (தரம் 8) இற்குக் குறையாததும் ஆண்டு 11 (தரம் 10) இற்கு மேற்படாததுமான கல்வித் தகைமையைக் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபனம்/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயதொழில் (விவசாயம் மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட) ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விபரங்களையும் பல்கலைக்கழக சிருப்பரின் கருமபீடத்தில் ரூபா 20/- செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/-க்கான காசுக்கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23செ மீ. x 10 செ. மீ. அளவினதான கடித மேலுறையுடன்சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தேர்வுகளும் அனுமதிகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி- 19.08.1995

பாடநெறியிற் பங்குபற்றுவோர் எழுத்துத் தேர்வு மூலமாகவும், நேர்முகத் தேர்வுமூலமாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு: 02,09.1995 சனிக்கிழமை மு. ப. 9 00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடமிருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.

(ஏ 5121)



## எமது மாணவர்கள் கவனத்திற்கு

* A/L 95
* B A [பேராதனை]

மாணவர்கள் 22-7-95 (சனி) காலை 8 மணிக்கு கல்லூரிக்கு சமூகமளிக்கவும்.

* ஏனைய வகுப்புகளுக்குரிய மாணவர்கள் 29-7-95 (சனி) வழமையான நேர அட்டவணையின்படி வகுப்புக்களுக்கு சமூகமளிக்கவும்.

நிர்வாகி:

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(எ-5123)



## D. M. I.

233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### A|L 95

கணக்கியல் பரீட்சை

| | | பகுதி I | பகுதி II |
|---|---|---|---|
| சனி | (22-7-95) | 8-30—11-30 | - |
| ஞாயிறு | (23-7-95) | - | 8-30—11-30 |

நடைபெறும்

ஆசிரியர்: D. SAM

(எ-5120)

### மணிவாக்கு

உழைப்பு எப்போதும் உண்டு. இதிலே நான் என்ற பாரத்தை நீக்கிவிட்டு உழைத்தால் வேலை கிறுகிறுவென்று வேகமாகவும் பிழை இல்லாமலும் நடக்கும். தன்னைத் தூக்கி தலையிலே வைத்துக்கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும் — பாரதியார்.

# ஊரடங்குச் சட்டம் நீக்கப்படாததால் அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்பதாம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட ஊரடங்கு சட்டம் நீக்கப்படாததினால் அத்தியாவசிய சேவைகள் பலமந்தகதியிலேயே இடம் பெற்றுவருகின்றது.

ஊரடங்கு சட்டத்தை சாட்டாக வைத்து அரசாங்கஊழியர்கள் பலர் திணைக்களங்களுக்கு சமூகம் கொடுக்காததினால் நாளாந்த சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு திணைக்களங்களுக்குசமூகமளிக்குமாறு ஊழியர்களை திணைக்கள தலைவர்கள் கேட்டுக்கொள்ளும் சில திணைக்களங்களில் ஊழியர்களின் வரவு குறைவாக காணப்படுவதால் திணைக்களங்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றன.

வலிகாமம் மேற்கு, வடக்கு பகுதிகளில் அனர்த்தங்கள் பெருமளவில்ஏற்பட்டிருப்பதாலும் இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாலும் இம்மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்ளுவதற்கும் சில அரசாங்க திணைக்களங்களில் ஊழியர்களின் வரவு மிக குறைவாகவே காணப்படுகிறது 170-சி

# நமது நோக்கு

## அரசின் பொய்கள்

பௌத்த சிங்களப் பேரினவாதம் பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து பொய்யிலே அதிகாரம் ஆட்சி ஆகியவற்றை நிலைநிறுத்த முயலும் ஒன்றாகும். பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் அரசும், அதை ஆட்டிப் படைக்கும் பௌத்த சங்கமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் பி. பி. சியும் அண்மையில் நடந்த யாழ். போர் நடவடிக்கை பற்றி பொய்யான தகவல்களையும் ஒலி, ஒளிபரப்புகளையும் செய்து விடுதலைப்புலிகளுக்கு சார்பாக செயல்படுகின்றன என்று குற்றம்சாட்டியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தாம் மேலும் 78 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தை கைப்பற்றி அங்கு சிவில் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருப்பதாகவும், புலிகளைத் தேடிக்கொண்டிருப்பதாகவும் தாம் துரத்தியடிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப் பின்னரும் அப்பட்டமான பொய்யை கூறிவரும் அரசும் இராணுவமும் இந்த சர்வதேச அமைப்புகளுக்கு எதிராக பொய்க் குற்றம்சாட்டுவது ஒரு கேலிக்கிடமான விடயம்.

ஒருவித முன்னறிவித்தல் எதுவுமில்லாமல் எறிகணைகளை ஏவ மக்களை தமது இருப்பிடங்களிலிருந்து விரட்டி கோவில்களிலும் தேவாலயங்களிலும் தஞ்சம் அடையும்படி கூறிவிட்டு நவாலி தேவாலயத்தில் அடைக்கலம் சென்றடைந்தவர்களை ஒரேதடவையில் பல குண்டுகளைப் பொழிந்து 120 அப்பாவிப் பொதுத் தமிழ் மக்களை இராணுவம் கொன்றழித்தது என்பது முற்றிலும் உண்மை. இவ்வுண்மையை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் தனது தலைமையகத்துக்கு அறிவித்து தலைமையகம் அதுபற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டது பிழையா?

தமிழர்களை விடுவிப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடுகிறோம் என்று கூறிக்கொள்ளும் அரசு, குழந்தைகள், தாய்மார் உட்பட 120 பொதுத் தமிழ் மக்களைக் கொன்று பல நூற்றுக்கணக்கானவர்களை காயப்படுத்திவிட்டு அந்த உண்மைகளை மறைப்பதற்கு முயற்சி செய்யலாமா? உண்மையை வெளிக்கொணர்ந்தவர்களை குற்றம் சாட்டலாமா? ஆம். பொய்யிலேயே வாழும் பௌத்த சிங்களப் பேரினவாதம் இதையும் செய்யும்; இன்னும் மேலதிகமாக தான் பிடித்த முயலுக்கு மூன்று காலென்றும் வாதிடும்.

பி. பி. சி. வடபகுதியில் படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பற்றி ஒளிபரப்பும்போது ஒரு தொழில்நுட்ப கோளாறால் தவறுதலாக ஒரு பிழையான நிழல்படமொன்றை ஒளிபரப்பியிருந்தது. அந்தத் தவறை ஏற்றுக்கொண்டும் விட்டது. அவ்வித நிலையிலும் லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் பி. பி. சி. இயக்குனர் ஒருவரை அழைத்து போர்முனையில் இவ்வாறான நடவடிக்கைகள் நடப்பது சகஜம்; உலக நாடுகளில் நடக்கும் படுகொலைகளோடு ஒப்பிடுகையில் யாழ்ப்பாணச் சம்பவங்கள் மிகவும் குறைவானது என்று எச்சரித்துள்ளார். எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும் விரலுக்கு ஏற்ற வீக்கம் தான்; சிறிலங்கா ஒரு சிறிய நாடு. தமிழீழம் அதிலும் பார்க்க சிறியது. போரும் போரில் சம்பந்தப்பட்டவர்களின் சனத்தொகைக்கு ஏற்ப பெரிதாக அல்லது சிறிதாக இருக்கும். ஆனால் படுகொலை பெரிதாக அல்லது சிறிதாக செய்யப்பட்டாலும் படுகொலை படுகொலைதான். அதை மூடி மறைக்கத் தேவையில்லை.

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகள் வெடிமருந்து கொண்டு சென்ற வாகனம் வெடித்து 150 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஒரு பொய்க் கதையைக் கூறி இதைக் கேட்பதற்கு ஆட்கள் இல்லை இராணுவம் நவாலியில் நடந்துகொண்டதை பெரிதுபடுத்துகிறீர்களே என்று முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப்போடப் பார்க்கிறது. நடந்த உண்மையை மறைப்பதற்கு நடவாத ஒரு பொய்க் கதையை உருவாக்க அரசு முயலுகிறது. கண்ணாடி வீடுகளில் வசிப்பவர்கள் அடுத்த வீடுகளுக்கு கல் எறியக் கூடாது.

# சிப்பாயின் சடலம் வந்ததால் தமிழ் வர்த்தகருக்கு கத்திக்குத்து!

(கொழும்பு)

அம்பாந்தோட்டைச் சந்தியில் தமிழ் வயோதிபர் ஒருவர் (75வயது) கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் நடந்த இராணுவத்தின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட படையினர் ஒருவரின் சடலம் அம்பாந்தோட்டைக்கு வந்தபோதே இவ் வயோதிபர் படையினரின் உறவினர் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டாராம்.

கடை முதலாளியான இவ் வயோதிபர் அம்பாந்தோட்டையில் நீண்ட காலம் வாழ்ந்து வந்தவர் என்றும் இவரைக் குத்திய நபர் இன்னும் கைது செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது ம-சி

# ★ தென்பகுதி மக்கள் அறியாதவாறு வெளிநாட்டுச் செய்திகளை அரசு திட்டமிட்டுக் குழப்பியது!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் ''புலிப் பாச்சல்'' தாக்குதல் ஆரம்பமானதும், தென் இலங்கையிலுள்ள மக்கள் யாழ்ப்பாணத்து செய்திகளை அறிந்து கொள்ள முடியாதவாறு வனொலியில் விசேட அலைவரிசைமூலம் திட்டமிட்டு குழப்பப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் இராணுவம் பலத்த உயிர்ச்சேதங்களை சந்தித்து, கைப்பற்றிய இடங்களை விட்டு, பின்நோக்கி ஓடத் தொடங்கியதும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களான பி. பி. ஸி, வெரிதாஸ், றேடியோ அவுஸ்திரேலிய மேற்படி செய்திகளை ஒலிபரப்பதொடங்கியதும் இவற்றை குழப்பும் வகையில் திட்டமிட்டு இலங்கை வானொலி செயற்பட்டதாம்.

இதற்காக இலங்கை வானொலி நிலையத்தில் விசேட அலைவரிசை ஒன்று செயற்பட்டதாகவும், இதில் திறமை வாய்ந்த தொழில் நுட்பவியலாளர்கள் இரவு - பகலாக சேவையாற்றியதாகவும் கூறப்படுகிறது.

விசேடமாக மேற்படிசெய்தி நிறுவனங்கள் தமிழில் செய்திகளை ஒலிபரப்பும் போது, தென் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் யாழ்-நகரின் உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ள முடியாதவாறு குழப்பப்பட்டதாகவும், கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-சி

# 5,000 தமிழ் ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிக்கு புதிதாக 5000 தமிழ் ஆசிரியர்களை நியமிக்கவுள்ளதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரான தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; வடக்கு, கிழக்கில் நீண்டகாலமாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும் முகமாக புதிதாக ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து விரைவில் கோரப்படும்.

வடக்கு, கிழக்கில் ஆசிரியர்கள் பற்றாக்குறையினால் நிலவும் இடர்பாடுகளை நீக்கி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கிலேயே புதிய ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளது என்றார்.

இதைவிட மலையகம் மற்றும் நாடெங்கிலுமுள்ள தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கும் புதிதாக ஆசிரியர் நியமிக்கப்படவுள்ளனர். ர-சி

### வெள்ளி விருந்து

## எது இராஜயோகம்?

இராஜயோக சாத்திரமானது உள்ளத்தின் நிலைகளை உற்று நோக்கிக் கவனிப்பதற்கு உரிய வழிவகைகளை நமக்குத் தருவதாக வாக்களித்திருக்கிறது. அங்ஙனம் உற்று நோக்குதற்குரிய கருவி மனமேயாகும்.

உற்று நோக்கும் சக்தியைச் செவ்வனே வழிப்படுத்தி, உள்ளுலகத்தின் பக்கமாகத் திருப்பினால், அது மனத்தைப் பாகுபாடு செய்து விஷயங்களைத் தெளிவு படுத்தும்.

மனத்தினுடைய சக்திகள் பரந்த ஒளிக் கதிர்களைப் போன்றன. அவற்றை ஒன்று கூட்டினால், அவை ஒளியைத் தருகின்றன. அறிவைப் பெறுவதற்கு நமக்கு இதுவே கருவி. புற உலகத்திலும், அக உலகத்திலும் ஒவ்வொருவரும் இதனைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

புறத்தே செல்கின்ற மனத்தின் நோக்கத்தைத் திருப்பி, அதன் வலிமை முழுவதையும் ஒருவழிப்படுத்தி நிறுத்தி, அது தன்னியல்பை அறிந்து பாகுபாடு செய்யும்படி தன்னையே நோக்கிச் செய்தல் மிகவும் கடினமான காரியம். ஆயினும், இந்த விஷயத்தைச் சாத்திரிய முறையாக அறிதற்கு இது ஒன்றே வழி.

— சுவாமி விவேகானந்தர்

### பலதும் பத்தும்

## நிறங்களும் குணங்களும்

நிறங்களும் மனித இயல்புகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றார்கள். இது பற்றி வெவ்வேறு விதமாக கருத்துக்கள் வெளி வந்துள்ளன.

பொதுவாக... ரோஜா நிறம் அன்பு, கனிவு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும். அடர்ந்த சிவப்பு வேகம், கோபம் ஆகியவற்றைக் காட்டிவிடும். சாதாரண சிவப்போ விருப்பத்தையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும்.

மஞ்சள் என்றாலே கூரிய அறிவைக்காட்டும். செம்மஞ்சள் சுயநல அறிவு, பெருமை மிகுந்த எண்ணம் ஆகியவற்றைக் காட்டும். பச்சை நிறமோ மத நினைவுகளையும் பக்தியையும் எடுத்துக்காட்டும். கோவில்களில்... சுவாமி தேரால் இறங்கிவரும்போது 'பச்சை சாத்தி' வருவது பக்தியை மேலும்தூண்டுகிறதல்லவா?

—மயூரன்

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு எரிபொருட்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும் 'மாகோ' சப்பலில் எரிபொருள்கள் வந்துள்ளன.

11 பரல் டீசல், 1 பரல் பெற்றோல், 1 பரல் ஒயில் என்பன மாகோவில் எடுத்து வரப்பட்டுள்ளது.

இதன்மூலம் பல்கலைக்கழகத்தில் எரிபொருளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு ஓரளவு நீங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைவிட யாழ். போதனா வைத்தியசாலைக்கும் யூன் மாத கோட்டா எரிபொருள்கள் வந்துள்ளன. 170-சி

## புனரமைப்பு

(கொழும்புத்துறை)

குருநகர் தேவதாஸ் நினைவுப் பூங்கா மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. 154 இ

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக்களம் இம்மாதம் 28ந் திகதி நடைபெற இருந்த கால் ஆண்டு மீளாய்வுப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாதகாரணத்தால் ஆகஸ்ட் மாதம்4ந் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வை. ஸ்ரீ காந்தா தெரிவித்தார். 162

# வடக்கில் ராணுவ நடவடிக்கை மூலம் அரசு தெற்கில் எதிர்ப்பை சமாளிக்கிறது

(கொழும்பு)

பொதுசன ஐக்கியமுன்னணி அரசுக்கு எதிராக யூலை நடுப்பகுதியில் எழுந்த பல அரசியல் ஆபத்துக்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் மூலம் அரசு தடுத்து நிறுத்தியுள்ளதாக தென்பகுதி அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

யூலை 15க்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்த அரசு அதை நிறைவேற்ற முடியாமல் திண்டாடியது.

மலையகத்தில் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்த மலையக தொழிற் சங்கங்கள், போர் மீண்டும் தொடங்கியிருப்பதால் தங்கள் வேலை நிறுத்தத்தங்களை தற்காலிகமாக பின்போட்டுள்ளன.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த வேலையில்லாத இளைஞர்க்கு இடைக்காலபடி, வேலைவாய்ப்பு, வாழ்க்கைச் செலவு குறைப்பு, அரசியல் ரீதியிலான ''வொய்ஸ் ஒப் அமெரிக்கா'' நிறுவன அமைப்பு வேலையின் எதிரொலி இவைகள் யாவும் பூகம்பமாக உருவெடுத்து வரும்வேளையில், அரசு வட பகுதியில் ஆரம்பித்துள்ள 'முன்னேறிப் பாய்தல்' என்ற பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கைகளின் மூலம் அந்த எதிர்ப்பு அலை யாவும் தற்காலிகமாக அமிழ்ந்து போயுள்ளன.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு தனது இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு தனது எதிர்ப்பு அலைகளை சமாளித்துக்கொண்டே இருக்கும் என அந்த விமர்சகர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந் நிலையில் அரசுக்கு தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டு அடுத்த தேர்தலையும் சந்திக்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கே-சி

## வெடிக்காத நிலையில் ஷெல்கள்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்கள்வலிமேற்கு பகுதியில் வெடிக்காதநிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இதனைவிட இராணுவத்தினர் விட்டுச் சென்ற மூட்டை முடிச்சுக்களும் வீதியோரங்களில் காணப்படுகின்றன.

-170

# காஷ்மீரில்கடத்தப்பட்டவெளிநாட்டவர் உயிருடனிருப்பதாகத் தகவல்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் போராளிகளால் கடத்தப்பட்ட 5 வெளிநாட்டவரும் உயிருடன் இருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறையிலுள்ள தங்கள் 21 போராளிகளையும் விடுதலை செய்யவேண்டும் இல்லையேல் கடத்தப்பட்டோர்கள் கொலை செய்யப்படுவர் என ''அஸ்ராம்'' முஸ்லிம் போராளிகள் குழு கடந்த திங்கள்வரை காலக்கெடு விதித்திருந்தது.

போராளிகள் குழுவினருடன் 3 முறை அதிகாரிகள் தொடர்பு கொண்டதனை அடுத்து மேற்படி காலக்கெடுவில் கடத்தப்பட்டோர்கொலை செய்யப்படவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டது. எனினும் போராளிகள் தங்கள் கோரிக்கையை விட்டுக்கொடுப்பதாக தென்படவில்லையாம்.

இதேவேளை இஸ்லாமாபாத்தில் அமெரிக்கத் தூதுவரை சந்தித்த பாகிஸ்தான் செனற்றின் மூத்த உறுப்பனர் ஒருவர், அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கடத்தப்பட்டோரை விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

வெளிநாட்டவரை கடத்துவதால் காஷ்மீர் பிரச்னை தீர்ந்துவிடப்போவதில்லை என, பொதுநலவாய அமைப்பின் வெளிநாட்டமைச்சர் லண்டனில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனும் கடத்தப்பட்டோர் உடன் விடுதலைசெய்யப்படவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

கே-சி

# இரத்தம் தோய்ந்த ராணுவ சீருடைகள்

(சாவகச்சேரி)

சண்டிலிப்பாய்ப் பகுதியில் வீடு ஒன்றில் இராணுவத்தினரின் இரத்தம் தோய்ந்த பல சீருடைகள் காணப்பட்டு வீட்டுச் சொந்தக்காரர்களால் பின் அவை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தப்பட்டன

இச்சீருடைகள் காயமடைந்த அல்லது உயிரிழந்த இராணுவத்தினரின் சீருடைகளாக இருக்கலாம் எனக் கருதப்படுவதுடன், காயமடைந்த இராணுவத்திற்கு இங்கு முதலுதவிச் சிகிச்சைகளும் நடைபெற்றுள்ளன.

அந்த வீட்டில் இருந்த சாரம், வேட்டி, சேர்ட்டுகளை கட்டுத் துணியாகப் பயன்படுத்தி அங்கு முதலுதவிச் சிகிச்சையும் நடைபெற்றுள்ளது.

155 சி

## வலி. மேற்கில் சிறுதானியச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பகுதியில் விவசாயிகள் மேற்கொண்ட சிறுதானிய பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் வலிமேற்கு பகுதிகளில் உள்ள வயல்கள் மற்றும் தோட்டங்களினுடாக டாங்கிகள் மூலம் சென்றதால் பயன் தரும் சிறுதானிய பயிர்கள் அழிந்து சேதமாயுகிள்ளன.

இதனால் விவசாயிகளுக்கு இம்முறை சிறுதானிய செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

-170

## நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அக்டோபரில் இந்தியா வருகிறது

(புதுடில்லி)

நியூஸிலாந்துகிரிக்கெட் அணி கிரிக்கட் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகைதரவுள்ளது

இவ் அணி இந்தியாவில் மூன்று டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆறு ஒரு நாள் ஆட்டங்களிலும் பங்குபற்றவுள்ளது-

அக்டோபர் மாதம் 18 ஆம் திகதி இந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டம் பங்களூரில் ஆரம்பமாகும் அது 22ம் திகதி முடிவடையும்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் சென்னையில் 25ம் திகதி ஆரம்பமாகி 29ம் திகதி முடிவுறும்.

மூன்றுவது டெஸ்ட் ஆட்டம கல்கத்தாவில் நவம்பர் மாதம் 8ம் திகதி ஆரம்பமாகி 12ம் திகதி முடிவுறும்.

நவம்பர் 15,18.21 24.26 29 ஆம் திகதிகளில் ஒரு நாள் ஆட்டங்கள் இடம்பெறும்,

அக்டோபர் முதலாம் திகதி இந்திய கிரிக்கெட் அணி தலைவர் குழுவுக்கு எதிராகவும் அக்டோபர் 12ம் திகதி பம்பாய் ஆட்டத்திலும் நியூஸிலாந்து அணி பங்குபற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது கி

## மந்திகை ஆஸ்பத்திரியில் பழுதடைந்தநிலையில் நீராவி அடுப்பு!

[வடமராட்சி]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒரேநேரத்தில் சுமார் 200 பேருக்கு சமைக்கக்கூடிய நீராவி அடுப்பு பாவனைக்குட் படுத்தப்படாமல் உள்ளது.

நீராவி அடுப்பு யந்திரத்தின் ஒரு பகுதியில் ஏற்பட்ட சிறு கோளாறு காரணமாகவும், விறகு தட்டுப்பாடு காரணமாகவும் கடந்த 15 வருடங்களாக துருப்பிடித்த நிலையில் காணப்படுகின்றது.

இந்த அடுப்பை இயக்குவதற்கென நியமிக்கப்படடிருந்த ஒரு ஊழியர் தற்போது வைத்திசாலையில் வேறு தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றார்.

நீராவி அடுப்பைத் திருத்துவதன் மூலம் நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு குறைந்த நேரத்தில் இலகுவாக சமைக்க முடியும். இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊழியர்கள் தெவிக்கின்றனர்.

51-ர-சி

## 83 கோடி ரூபா அரச பணத்தை ராவிடமிருந்து மீளப் பெற முயற்சி

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் எண்பத்தி மூன்று கோடி ரூபாவை அரசுக்கு செலுத்த வேண்டியுள்ளதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசுக்கு சொந்தமான ஹெலிக்கொப்டர்களையும் விமானங்களையும் தனது சொந்த குடும்பத்தினரின் தேவைக்குப் பயன்படுத்திய வகையிலேயே அவர் அரசுக்கு இத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது.

இப்பணத்தை அறவிடும்படி வற்புறுத்தி நரசிம்மராவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா என்பது குறித்து இந்திய வரியிறுப்பாளர் ஒருவர் சட்ட ஆலோசனையை நாடியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன-

இந்திய அரசியலமைப்பு இவ்வாறான சட்டநடவடிக்கைகளுக்கு போதியளவு அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கி

## படையினரால் கொள்ளை

(மானிப்பாய்)

மூளாயில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள பல வீடுகளை உடைத்து கொள்ளையடித்துள்ளனர்.

மூளாய் புதுச்சின்னம்மன் கோவிலிலும் அதன் அருகாமையிலுள்ள வீடுகளிலும் தங்கியிருந்த படையினர் பிரதான வீதியில் பனைமரங்களைத் தறித்துப் போட்டு சென்றி அமைத்துள்ளனர். இந்திய அமைதிப்படை செய்தது போல் பலரது வீட்டு வேலிகளை கொழுத்தியுள்ளனர்.

71-சி

## அம்பலாந்தோட்டையில் பணம், வான் கொள்ளை

(கொழும்பு)

அம்பலாந்தோட்டை பகுதியில் குழுவொன்று ஹைஏஸ் வான் ஒன்றையும் 11 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்து சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் ஐந்து பேர் அடங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கே-கி

## நீர்த் தாங்கியில் பெண்ணின் சடலம்

(கொழும்பு)

ஹட்டனில் நீர்த்தாங்கி ஒன்றில் ஒரு பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஹட்டன் நகருக்கு வழங்கிய குடிநீர் விநியோகம் இரு நாட்களாக துண்டிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது இவரை யாரும் கொலை செய்துவிட்டு உடலை நீர்த்தாங்கியில் போட்டுள்ளனரா என்பதுபற்றி பொலிஸார் தீவிர புலன்விசாரணை செய்துவருகின்றனர் என்று கூறப்படுகிறது.

தற்பொழுதுதாங்கியிலுள்ள நீரை வெளியேற்றிவிட்டு, மீண்டும் குடிநீர் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

ம சி

## இராணுவ நடவடிக்கைகளில் உயிரிழந்த ஆசிரியர்களின் குடும்பத்திற்கு சம்பளம் வழங்குக

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின்போது கொல்லப்பட்ட ஆசிரியர்களின் குடும்பத்திற்கு அவர்களின் சம்பளத்தை தொடர்ந்து வழங்குவதோடு, விதவைகள் அநாதைகளுக்குரிய இளைப்பாற்றுச் சம்பளம், மரணப்பணிக்கொடை, நஷ்டஈடு ஆகியவற்றைத் தாமதமின்றி வழங்க தேவையான நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் மகஜர் மூலம் கோரியுள்ளார்.

அத்துடன் இவ் இராணுவ நடவடிக்கையினால் காயப்பட்டவர்களுக்கு முதல் மாதத்திற்கு உரிய வைத்திய அலவன்ஸ் ஆக ரூபா 3000 வழங்கும்படியும் பொதுச்செயலாளர் கோரியுள்ளார்.

-சி

## அரச அதிபர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட இடங்களை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நேற்று முன்தினம் காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

வலிகாமம் வடக்கு, மற்றும் வலி. மேற்குப்பகுதிகளுக்கு நேரில் சென்ற அரச அதிபர் விமானக்குண்டுத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகிச் சேதத்துக்குள்ளான கட்டிடங்கள் மற்றும் ஆலயங்களையும் பார்வையிட்டார்.

162-சி

## சொந்த இடங்களிற்கு மக்கள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மற்றும் யாழ் நகர்ப்பகுதியில் தங்கியிருந்த பொதுமக்களில் அனேகமானோர் வலிகாமப் பகுதிக்கு மீண்டும் சென்று தங்கியுள்ளனர்.

முகாம்களில் இருந்தபெரும்பாலான மக்கள் தமது இருந்த இருப்பிடங்களுக்கு சென்றுள்ளனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வலிமேற்கு பகுதியை நோக்கி சென்றனர்.

170 சி

# உலகெங்கும் வாழும் தமிழர்கள் வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

உலகெங்கும் வாழும் தமிழர்கள் குறிப்பாக மேற்கு நாடுகளில், இலங்கை அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தி வருகின்றனர்.

கடந்த 13ம் திகதி நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலும், அதே தினத்தில் சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமிலும் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப்பட்டன.

கடந்த 15ம் திகதி பாரிஸ், லண்டன், பேர்ண், மெல்பேர்ண் ஆகிய தலைநகரங்களிலும் மற்றும் இத்தாலி, கனடா நாட்டு நகரங்களிலும் தமிழர்களால் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

தென் இந்தியாவிலும் பாட்டாளி மக்கள் கட்சி வைகோபாலசாமியின் ம. தி. மு. க., தி. மு. க போன்ற அரசியல் கட்சிகளும் தங்கள் எதிர்ப்புக்குரல்களை தெரிவித்ததோடு உண்ணாவிரதமும் ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர்.

வடபகுதியில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையால் பொதுமக்களே பெரிதும் பாதிப்புறுவதாக இவ் எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் அரசுக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கே-சி

# வலி. மேற்கு கைப்பற்றப்பட்டதாக தெற்கில் வெடிகொளுத்தி ஆரவாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளை இராணுவம் கைப்பற்றிவிட்டது என்ற செய்தி தென்னிலங்கையில் அறிவிக்கப்பட்டதும், மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையில் யாழ். மாவட்டத்தில் உள்ள வலிகாமம் மேற்குப் பகுதியை இராணுவம் முற்றாகக் கைப்பற்றிய பின், தற்போது யாழ் நகரை நோக்கி இராணுவம் மிக வேகமாக முன்னேறிச் செல்வதாகவும், யாழ். நகருக்கு மிக அருகாமையில் உள்ள அராலித் துறையில் இராணுவம் தற்போது தரித்து நிற்கிறது என்ற செய்தி தென்னிலங்கையில் தெரிவிக்கப்பட்டதும் சிங்கள மக்கள் வெடி கொளுத்திப் பெரும் ஆரவாரம் செய்தனர். இவர்களுடன் முஸ்லிம்கள் பலரும் வெடி கொளுத்தி ஆர்ப்பரித்தனர்.

குறிப்பாக, கொழும்பு, கம்பஹா, குருகமைப் பகுதிகளில் பெருமளவில் வெடிகள் கொளுத்தப்பட்டதாகவும் சில இடங்களில் வீதியால் சென்ற மக்களுக்குப் பல வர்த்தகர்கள் குளிர்பானம் வழங்கி, மகிழ்ச்சி தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வி சி

# சிங்கள மாணவரை மட்டும் பஸ்களில் ஏற்றுகின்றனர்

(கொழும்பு)

பதுளை, பசறை வீதியில் தமிழ் மாணவர்கள் கோணக்கலை தமிழ் வித்தியாலயத்திற்கு போவதற்காக சீசன் டிக்கெட்டுக்களை எடுத்துள்ளபோதிலும் பஸ்களில் ஏற்றப்படுவதில்லை என பல பெற்றோர் புகார் செய்கின்றனர்.

சிங்கள மாணவர்களை பஸ் கண்டக்டர்கள் வேறு இடங்களில் நிற்கச்சொல்லி ஏற்றிக் கொண்டுபோய் விடுவதாகவும் தமிழ் மாணவர்களை பாரபட்சம் காட்டி ஒதுக்கிவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களுடன் சேர்ந்து ஏற முயலும்போது அடிக்கடி கைகலப்புக்களும் ஏற்படுகின்றன. பெரும் எண்ணிக்கையில் வரும் சிங்கள மாணவர்கள் வேண்டுமென்றே தமிழ் மாணவர்களோடு தகராறு செய்து தாக்குகின்றனர்.

இதனால் தமிழ்ப்பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பப் பயப்படுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

ர-சி

# தொலைபேசிக் கட்டணத்தில் இராணுவத்துக்கு சலுகை

(கொழும்பு)

வடபகுதியில நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் கடிதங்களை அவர்களின் குடும்பத்தினரிடம் தாமதமின்றி ஒப்படைப்பதற்காக புதிய சேவை ஒன்றை தபால் பகுதி ஆரம்பித்துள்ளது.

இராணுவத்தினரிடமிருந்து அவர்களின் குடும்பத்தினருக்கு அனுப்பப்படும் நடவடிக்கை பணிகள் முத்திரை குத்தப்பட்ட கடிதங்கள் வழமையான விநியோக சேவைக்கு புறம்பாக இரவுபகலென்று பாராது உடனடியாகவே முகவரியாளர்களிடம் இத்திட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்படும்.

அத்துடன் புதிய தொலைபேசி இணைப்பில் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கவும் அதன் கட்டணத்தில் அவர்களுக்கு பதினைந்து சதவீத சலுகை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கி-சி

# ராக்கிங் செயலால் மாணவனின் கை முறிந்தது

(கொழும்பு)

பேராதனைப்பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த முதலாமாண்டு மாணவர் ஒருவர் ராககிங் ஒன்றின் போது கீழேவிழுந்து கைமுறிந்ததால் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 13ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது பழைய மாணவர்கள் சிலர் முதலாம் ஆண்டு மாணவனை பெரிய பெட்டி ஒன்றின்மீது ஏறிக் குதிக்குமாறு கூறினர். இவர் பெட்டியில் ஏறியபோது பெட்டிசரிந்து விழுந்ததில் இவரது கை முறிந்தது.

பல்கலைக்கழக உபவேந்தர் எ. சி, எம். மத்தும பண்டார இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை கடந்த 17ம் திகதி பேராதனைபல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தாம் ராக்கிங்கை கைவிடப்போவதாகவும் புதிய மாணவர்களை வரவேற்கும் புதிய முறை பற்றி ஆராயவுள்ளதாகவும் அறிவித்திருந்ததும் தெரிந்ததே.

ர-சி

## அதிபர்கள் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர் - ஆசிரியர் கூட்டங்கள் அவ்வப் பாடசாலைகளில் இன்று வெள்ளி காலை 9.00 மணிக்கு நடைபெறும். சகல ஆசிரியர்களும் தவறாமல் சமூகம் கொடுக்குமாறு வலயம்- 2 இன் கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

சி

## அரையிறுதி ஆட்டம்

[குருநகர்]

யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் டொனல்ட்கின்ன கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட யாழ் ஜொலிஸ்ரார் வி. க. அணியும் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் தகுதி பெற்றுள்ளன.

90-கி

## ம. எண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

'மாகோ' கப்பலில் வந்து சேர்ந்த மண்ணெண்ணையை பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாகோவில் இம்முறை 1950 பரல் மண்ணெண்ணை வந்து சேர்ந்திருப்பதால் பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் வீதமே வழங்கப்படவுள்ளது.

இம் மண்ணெண்ணை அடுத்த வாரம் முதல் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

170- சி

## யாருடையது?

கந்தரோடை வீதி, மாகியப்பிட்டிச் சந்திக்கருகாமையில் இருந்து ஓர் லுமாலா துவிச்சக்கரவண்டி (அநாதரவான நிலையிலிருந்த) திரு. சுப்பையா ஆனந்தராசா என்பவரால் எடுக்கப்பட்டு கோண்டாவில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே, இத் துவிச்சக்கரவண்டி உரிமையாளர் தகுந்த ஆதாரங்களை காட்டி சைக்கிளை பெறலாம்.

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் பொலிசாருக்கும் உதவியாக இவ்விசேட அதிரடிப் படையினர் செயற்பட்டு வந்தனர்.

இரண்டாவதுசம்பவம் நேற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெற்றது. சித்தாண்டியில் ரயில் பாலத்தின்மீது ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்கியதில் 8 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே பலியாகினர் அதிகாரி ஒருவர் உட்பட 3 பேர் படுகாயம் அடைந்தனர்.

(கே-க-கி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 -21

வெள்ளி இரவு

8-02 கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுகமாவது இ. கிருஷ்ணகுமார் எழுதிய 'களிமண் பதிவுகள் முதல் கணணிப் பதிவுகள்வரை' எனும் நூல் அறிமுகத்தை அடுத்து சிறுகதை கருணை ரவி எழுதிய 'சாவின் பெறுமதி', சிறுகதையைத் தொடர்ந்து - கவிதை ந. கிருஷ்ணா எழுதிய 'வெஞ்சமராடியே'.

8-25 கணப் பொழுது - வ. ராஜேஸ் எழுதிய 'மேஜர் கஜேந்திரன்.

8-30 செய்திகள்.

8-40 அரசியல் அரங்கம் -வே: பாலகுமாரன் எழுதிய 'விடுதலைக்கு முந்திய நாட்கள்'.

8-50 ஏர்முனை - நிகழ்ச்சியில் 'தேனீ வளர்ப்பு' கேள்வி-பதில்.

9-00 ஒலிபரப்பு நிறைவு.

1995–07–22

சனி காலை

7-02 மாவீர வணக்கம்.

7-15 நீங்கள் கேட்டவை.

7-30 செய்திகள்.

7-35 பத்திரிகைச் செய்திகள்

7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

8-00 ஒலிபரப்பு நிறைவு.

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–07–21

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்.

5-02 எழுச்சிக் கீதம்.

5-10 புதியவை.

5-15 கணநேரக் காவியங்கள்

5-30 மண்ணின் குரல்.

5-40 நேயர் கடிதங்கள்.

5-45 வெற்றிச் சுவடுகள்.

6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்.

6-02 நாடகம்.

6-10 செய்திகள்.

6-15 என் தெரிவு.

6-30 ஒலிபரப்பு நிறைவு.

## தீர்வு கிட்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை இராணுவம் பலப்படுத்தி வருகின்றது என்றார்.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் தமது அடுத்தகட்ட நடவடிக்கைக்கு ஆயத்தமாகி வருகின்றார்கள். புதிய பிரதேசத்தில் துருப்புக்களை எவ்வாறுஈடுபடுத்துவது என்பதுபற்றியும் படைத்தளபதிகள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கே-ர-கி

## க. பொ. த.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரின் இவ்வறிவிப்புக்கு அமைய முல்லைத்தீவு. கிளிநொச்சி மாவட்டங்களிலும், வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளத்திற்கு வடக்கேயுள்ள ஓமந்தை உள்ளிட்ட பகுதிகளிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் க பொ. த உயர்தர பரீட்சை ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இப்பரீட்சை இம்மாதம் 31-ம் திகதி அன்று ஆரம்பமாகவிருந்தது ஏனைய பகுதிகளில் இது திட்டமிட்டவாறு நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

-கி

## வடமராட்சிக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மீன்பிடிக்கச் சென்ற இவர்களின் படகை நெருங்கிவந்த கடற்படையினர் முதலில் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்த சமயம் பயத்தினால் இயந்திரத்தை நிறுத்திவிட்டு இருகைகளையும் மேலே உயர்த்திக் கொண்டுகடலில் குதிக்க முற்படுகையில் பருத்தித்துறை சுப்பர் மடத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான துரைசாமி நாகராசா [வயது 50] என்னும் மீனவரே வலது காதிலும் இரு முழங்கைகளிலும் மார்பிலும் வேட்டுக்களுக்கு இலக்காகி காயமடைந்து மந்திகை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருடன் கூடச் சென்ற மாதகலைச் சேர்ந்த ஜெயசிங் [வயது 30] என்பவர் கடலில் குதித்து நீந்திக் கரைசேர்ந்தார்.

இதேவேளை பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் காணாமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

புதன்கிழமை இரவு 8 மணியளவில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் ஸ்ரீலங்கா கடற்படையினரும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். பரா லைற் ஒளிபாய்ச்சியே மீனவர் மீது தாக்குதலை கடற்படையினர் ஆரம்பித்தனர். அப்பொழுதே இவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியைச் சேர்ந்த இவ்விரு மீனவர்கள் பயன்படுத்திய படகும் வலைகளும் சேதமானதாகவும் தெரியவருகின்றது.

51-160-கி

## நாளை நமதாகும்!

கோழிச் சிறுகுஞ்சை
கொத்தவந்த வான்பருந்தை
தாழப் பறக்கையிலே
தானரிந்தார்
வேளையிதே —
நீளப் பெருந்தடியை
நீயெடுத்துப் பாய்ந்துவரின்
நாளை நமக்
காகுமே!

★ ★ ★

மீசை முளைக்காதான்
மூச்சுடையான் உன்னிளையான்
நாசப்படுத்துகிறான்
நம்பகையை
ஆசைக்காய் —
ஓடிக் கலந்துயிரை
ஒளித்துவைத்துப் போனவுடன்
கூடிச் சவமெரிப்பார்
கேள்!

– நிம்மதி

# வெற்றிலைக்கேணி கரையில் பாரிய இராணுவ தரையிறக்கும் கப்பல்

(தாளையடி)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற்பிரதேசத்தில் கரைக்கு மிக அண்மையில் பாரிய தரையிறக்கும் கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளது. நேற்றுக் காலை 7 மணியளவில் ஆறு பீரங்கிப்படகுகள் பாதுகாப்பு வழங்க வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கு நேரே கரை நோக்கி இக்கப்பல் வந்ததை காணக்கூடியதாகவிருந்தது.

இக்கப்பலில் இருந்து இராணுவத்தினரும் இராணுவ தளபாடங்களும் தரை இறக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

இதேவேளை நேற்று மாலை ஆனையிறவு, இயக்கச்சி இராணுவ முகாம் பகுதிகளிலிருந்து இராணுவ வாகனங்களின் தொடர் அணி வெற்றிலைக்கேணி இராணுவ முகாமுக்கு வந்து திரும்பிச் சென்றதை வாகனங்களின் பேரிரைச்சலைக் கொண்டு அறியக்கூடியதாயிருந்தது.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டியகடற் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைப் பீரங்கிப்படகுகள் காலையில் ஆளியவளை கரையோரங்களை நோக்கி பீரங்கித் தாக்குதல்களையும் நடாத்தின

51-163-கி

# குருநகர் மீனவர் மூவர் காவலூரில் தடுத்து வைப்பு

[யாழ்ப்பாணம்]

குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தீவகப் பகுதி மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்

சென்ற மார்ச் மாதம் குருநகர் பகுதியிலிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காகச் சென்ற மீனவர்களான சேவியர் இரவீந்திரன், வீரன் கந்தசாமி, ஆசீர்வாதம் திவ்வியநாதன் ஆகிய மூன்று மீனவர்களும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் இராணுவத்தினரால் கைது செய்யபட்டார்கள். இவர்கள் மூவரும் ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் கடந்த நான்கு மாத காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தீவகப் பகுதி மேலதிக அரசாங்கஅதிபர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

இம் மீனவர்கள் மூவரினதும் புகைப்படங்கள் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 160-கு

# 'ட்ரக்கில்' பலியானோரின் சடலங்கள் ஹங்கேரியில் தகனம் செய்யப்படும்

(புடாபெஸ்ட்)

ஹங்கேரியில் கடந்தவாரம் இடம்பெற்ற ட்ரக் வண்டி அனர்த்தத்தின்போது உயிர் தப்பிய 18 இலங்கையரையும் இலங்கைக்கு கொண்டுவரும் முயற்சியில் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஈடுபட்டு வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் பிரஸ்தாப 18 இளைஞர்களையும் இலங்கைக்கு கொண்டுவரும் முகமாக ஹங்கேரிய அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக ஜேர்மனிக்குள் புக முயற்சித்த இலங்கையர் 18 பேரும் ஒரு வருடத்துக்குமுன் மொஸ்கோ சென்றனர். பின்னர் உக்ரேயினில் தொழில் செய்தனர்.

இவர்கள் எவரிடமும் சட்டபூர்வ ஆவணங்களோ நாட்டிற்குள் புகும் விசாக்களோ இருக்கவில்லையாம்.

இவர்களைக் கடத்திய மோசடியில் இலங்கையர் ஒருவரும் சம்பந்தப் பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு தற்போது தகவல் வெளியிட்டுள்ளது:

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக்கிரியைகள் ஹங்கேரியில் நடைபெறுமென உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் நேற்று தெரிவித்தன க-கி

## பணிமனை இயங்குகிறது

தமிழீழ நிர்வாக சேவைப் பணிமனை கடந்த 19ம் திகதி தொடக்கம் வழமைபோல இயங்கத் தொடங்கிவிட்டதாக நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். -கி

# தொகுதிக்கு 100 பேர் வீதம் தொண்டர் அணியில் சேர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு உதவியாக தேசிய துணைப்படை அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது.

இப்படை அணியினர் முப்படையினருக்கும் பொலிசாருக்கும் யுத்த மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலும் உதவியாக செயற்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் சுமார் 100 பேர் வரையில் இத்தொண்டர் பணிக்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

முதல் கட்டமாக 150 பேர் கொண்ட முதல் படை அணி ஒன்று நேற்று பொலிஸ் விளையாட்டரங்கில் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளதாம்.

இராணுவத்தினரின் மேற்பார்வையில் இவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளதாம். -க-கி

# வீழ்த்தப்பட்ட 'புக்காரா'வின் பாகங்கள் சென்.பீற்றேஸ் முன்றலில் பார்வைக்கு!

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'புக்காரா' விமானத்தின் சிதைந்த பாகங்கள் மக்கள் பார்வைக்காக நவாலி சென் பீற்றேரிஸ் தேவாலயத்துக்கு அருகில் நேற்றுமுதல் வைக்கப்படடுள்ளது விமானத்தின் பின் பகுதி, இறக்கைகளின் பகுதிகள விமான சில்லுகள், விமானியின் தலைக்கவசம் உட்பட பல சிதைந்தபாகங்கள் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. மேற்படி தேவாலய பகுதிகளில் கடந்த ஒன்பதாம் திகதி புக்காரா விமானம் பல குண்டுகளை அடுத்தடுத்து வீசியதில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் உடல் சிதறிப் பலியானதும் பின்னர் இவ்விமானம் கடந்த வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் பகுதியில் விடுதலைப்புலிகளினால் சுட்டு விழ்த்தப்பட்டமையும் தெரிந்ததே. (வி கி)

# வரி செலுத்துவோருக்கு சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய்ப்பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது. கீழ்க்காணும் விபரப்படி நடைபெறவுள்ள இச் சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினர் கேட்டுள்ளனர்.

### வலிகாமம்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) மு. ப. 10-30 மணிக்கு குமாரசாமி மண்டபம், யாழ் இந்துக் கல்லூரி;

### தென் மராட்சி

தென் மராட்சி பச்சிலைப் பள்ளி உ. அ. அ. பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) பி. ப. 3-00 மணிக்கு டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி.

### வடமராட்சி

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ பிரிவுகள் 24ம் திகதி (திங்கள்) பி. ப 3-00 மணிக்கு மத்திய கல்லூரி நெல்லியடி. (வி-சி)

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு—அம்பாறை சிறப்புப் படையணியும், நிதர்சனமும் இணைந்து வழங்கும்

சி. சேரனின்

"உறங்காத கண்மணிகள்"

முழுநீள திரைப்படம்

திரைப்பட வெளியீட்டுப்பிரிவு,
நிதர்சனம்,
தமிழீழம்.

(எ-5119)

### யாழ். கோட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் தலைமையில் நேற்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரியில் நடாத்தப்பட்ட அதிபர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### நாளை முடிவு

இதேவேளை யாழ் குடாநாட்டிலுள்ள ஏனைய பாடசாலைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என்று வலயம்-1 இன் பணிப்பாளர் இ. சிவானந்தன் நேற்று தெரிவித்தார்.

-95-170-கி

### தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக விமர்சித்துள்ளது:

ஏப்ரல் 19ம் திகதிக்குப் பின்பு, சிறுபான்மை இன தமிழர்கள் தகுந்த காரணங்களின்றி கைதுசெய்யப்படுகிறார்கள்; மனிதாபிமான மற்ற முறையில் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசை குற்றம் சாட்டியுள்ளது:

அரசு தகுந்த கண்காணிப்புகளை மேற்கொண்டு மனித உரிமை மீறல்கள் ஏற்படாதவாறு கவனமாகச் செயல்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையைக் கேட்டுக் கொண்டிருப்பதாக 'ராய்ட்டர்' செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

### இராணுவ

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சிங்கள அரசு தமிழருக்கு எதிரான ஒருயுத்தத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த யுத்தத்தில் தனதுபடைகள் வெற்றி பெறவேண்டும் என்று அரசு துடியாய் துடிக்கின்றது. சிங்களப் பத்திரிகை உலகம் மற்றும் எதிர்க்கட்சிகள் உட்பட சிங்கள தேசமே போருக்கு ஆதரவாககுரலெழுப்பிசந்திரிகா அரசின் கரத்தை வலுப்படுத்துகின்றன; "யாழ்ப்பாணத்தின் பெரும்பகுதியை சிங்களப்படைகள் கைப்பற்றிவிட்டன" என்று அரச வானொலி அறிவித்தபோது வெடி ்காழுத்தி, இனிப்புப் பண்டங்கள் வழங்கி "வெற்றியைக்" கொண்டாடிஉள்ளது. இந்தக் கற்பனையான வெற்றிச் செய்தி சிங்கள தேசத்தில் பரவியதும், அன்று துட்டகைமுனு அடைந்த மகிழ்ச்சியை இன்று சிங்கள மக்கள் தாமும் பெற்றுவிட்டதுபோல உணர்ந்தனர் போலும்;

இதேவேளை சிங்கள அரசு நடாத்திய ஒரு இராணுவ நடவடிக்கையை 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையால் தமிழினம் முறியடித்துவிட்டது என்பது உண்மைதான். ஆயினும் பின்வாங்கிச் சென்ற படையினர் இப்போதும் பலாலிப் பெருந்தளத்தில்தான் உள்ளனர். கிழக்கில் இருந்தும்-தெற்கில் இருந்தும் படையெடுப்பிற்கெனக் கொண்டுவரப்பட்ட படையினரும் - ஆயுத தளபாடங்களும் இப்போதும் குடாநாட்டில் படைத் தளங்களிலேயே உள்ளன. அத்துடன் குடாநாடு மீதான படைநடவடிக்கைகளை இன்னமும் தாங்கள் கைவிடவில்லைஎன சந்திரிகா அரசும் - படைத் தளபதிசுளும் அறிக்கைமேல் அறிக்கை ்ளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே அடுத்த ஒரு இராணுவப் படையெடுப்பை குடாநாடு எதிர்கொண்டபடியே உள்ளது என்பது உண்மையாகும்.

நெருக்கடி மிகுந்த இந்த வரலாற்றுச் சூழலில் இருந்து தமிழினத்தைப் பாதுகாக்கும் சரித்திரக் கடமை இன்றைய இளம் சமூகத்திற்கே உண்டு. போருடை தரித்து போராயுதங்களுடன் எமது ஊர்களுக்குள் புக முயலும் எதிரிப் படையைத் தடுத்து நிறுத்தி பின்வாங்கி ஓடச் செய்யவல்ல சக்தி எமது இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் உண்டு. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து எமது இனத்தைப் பாதுகாப்பதா? அல்லது அசண்டையீனமாக இருந்து எமது மக்களை அழிய விடுவதா? என்று முடிவெடுக்க வேண்டிய தருணம் எமது இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளது: போருக்கு முகம் கொடுக்காது வீணேசும்மாஇருந்தால்நாமும் அழிந்து எமது குடும்பத்தையும் உறவுகளையும் இழந்துவிடுவோம். போருக்கு முகம் கொடுத்தால் எதிரியை அழித்து அவனை எமது மண்ணிலிருந்து விரட்டி எமது மக்களைப் பாதுகாக்க முடியும். ஆகவே புலிகள் இயக்கத்தில் இணைந்து - ஆயுதப் பயிற்சிபெற்று- எதிரிபடைகளை விரட்டி அடிக்க இளைஞர்களும்-யுவதிகளும் உடனடியாகவே முன்வர வேண்டும் என அவசரவேண்டுகோள் விடுக்கின்றோம்.

"தமிழர் படையின் ஆட்பலம்தான் தமிழர் தேசத்தை பாதுகாக்க வல்லது" கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Jeffice Sri Lanka under License number B/168361?